
# திராவிடத்தால் வாழ்கிறோம்

815

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மகாராஷ்டிரா மாநிலத்திலும் மொழிப்போர்!

புதிய கல்விக் கொள்கையின்படி, மகாராஷ்டிர மாநில பா.ஜ.க. அரசு, அங்குள்ள பள்ளிகளில், ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கு மூன்றாவது மொழியாக, இந்தியைக் கட்டாயப் பாடமாக்க முடிவெடுத்துள்ளது. புதிய கல்விக் கொள்கையின்படி, 5+3+3+4 என்ற புதிய கல்வி அமைப்பை நடைமுறைப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. ஆனால், 'மராத்தி, ஆங்கிலம் மட்டுமே தங்களுக்குப் போதுமானது, மூன்றாவது மொழியாக இந்தி தேவையில்லை' என சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ், சிவசேனா (உத்தவ்), நவ நிர்மாண் சேனா, காங்கிரஸ் கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

நவ நிர்மாண் சேனாவின் மாணவர் அணி சார்பில், நவி மும்பையில் இந்தித் திணிப்புக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில், தமிழ்நாட்டின் நிலைப்பாடுதான் எங்களுடையதும் என்றுகூறி, இந்தியைக் கட்டாயமாக்கிய அரசாணையின் நகல்களை எரித்து, எதிர்ப்பை வெளிப்படுத்தினர். "இந்தி தேசியமொழி அல்ல. அது நாட்டில் உள்ள மற்ற மொழிகளைப் போல் ஒரு மாநில மொழியே. அதை ஏன் மகாராஷ்டிராவில் தொடக்கக் கல்வியில் கற்பிக்க வேண்டும்? நாங்கள் இந்துக்கள்தான். ஆனால், இந்திக்காரர்கள் அல்ல. மாநிலத்தை இந்திமயமாக்க விரும்பினால், போராட்டம் வெடிக்கும்" என்று அக்கட்சியின் தலைவர் ராஜ் தாக்கரே எச்சரித்துள்ளார்.

"அரசு அலுவல் மொழியாக மராத்தி இருக்கையில், இந்தி போதிக்கத் தேவையில்லை. முதலில் மராத்தியை முழுமையாகக் கட்டாயமாக்குங்கள். பணி, தொழில் மற்றும் வியாபாரங்களில் முதலில் மராத்திக்கு மதிப்பு கிடைப்பது அவசியம்" என்று சிவசேனா உத்தவ் அணியின் சஞ்சய் ராவத் கூறியுள்ளார். அங்கு, பெரும்பாலான தொடக்கப் பள்ளிகளில் 2 ஆசிரியர்கள் மட்டுமே இருக்கின்றனர். அவர்கள் 3 மொழிகளை எப்படிக் கற்பிக்க முடியும் என்றும் அம்மாநில கல்வியாளர்கள் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். மும்மொழி என்றால் இந்தி அல்ல, எந்த இந்திய மொழியை வேண்டுமென்றாலும் கற்றுக்கொள்ளலாம் என்று, தமிழ்நாட்டுக்குப் பாடமெடுத்தார்கள் சிலர். ஆனால், அது இந்திதான் என்று தமிழ்நாடு காட்டிய எதிர்ப்பு, மகாராஷ்டிராவில் நிரூபணமாகி எதிர்ப்பைப் பெற்றிருக்கிறது.

## ஃப்ளாஷ்பேக்





'புரட்சிமணி' (எ) டேவிட் சத்தியநாதன்

### 'தளபதியால் வெளியிடப்பட்ட நூல்!'

முத்தமிழறிஞர் கலைஞர் குறித்து, 'கலைஞர் யார்?' என்ற ஒரு சிறிய நூலை எழுதினேன். திருவாரூரில் கலைஞர் கால்பதித்த இடங்களைத் தேடிப்பிடித்து படமாக்கி, அத்துடன் தலைவரின் வரலாற்றுப் பதிவுகளையும் அந்நூலில் பதிவு செய்தேன். நூலுக்கு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அணிந்துரை தந்தார்கள். 2012-ஆம் ஆண்டு திருவாரூருக்கு இன்றைய முதலமைச்சர் தளபதி அவர்கள் வருகை தந்தபோது, அவரது கரங்களால் நூலை வெளியிட்டார். முதல் பிரதியை மாவட்டச் செயலாளர் அண்ணன் பூண்டி கே.கலைவாணன் பெற்றுக் கொண்டார். நிகழ்ச்சியின்போது முன்னாள் அமைச்சர் உமதிவாணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுகவனம் ஆகியோர் உடனிருந்தனர். அப்போது எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம், என் வீட்டை அலங்கரித்துக்கொண்டும், என் சட்டைப்பையில் இருந்தபடி தினம் உலா வந்துகொண்டும் இருக்கிறது.

– 'புரட்சிமணி' (எ) டேவிட் சத்தியநாதன்,
துணை அமைப்பாளர், தி.மு.க. ஒன்றிய இலக்கிய அணி,
குடவாசல் (தெ) ஒன்றியம், திருவாரூர் மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## ம.ஆருக

### ஜனநாயகப் படுகொலை!

1991-ஆம் ஆண்டு, கழக ஆட்சியைக் கலைத்தபோது, பத்திரிகைகள் 'ஜனநாயகப் படுகொலை' என எழுதின. பிப்ரவரி 1-ஆம் தேதி, இந்து ஆங்கில இதழ், 'இந்திய அரசியல் சட்ட வரலாற்றில் ஈடு இணையற்ற அட்டூழியம்' என எழுதியது. 'மாநிலம் அமைதியாக இருக்கும் இந்தத் தருணத்தில், நிலையான ஆட்சி நடைபெறும் தருணத்தில், அதிகாரத்தை, துஷ்பிரயோகம் செய்துள்ளனர்' என அனைத்துப் பத்திரிகைகளும் கண்டித்து எழுதி இருந்தன.

## திராவிட மாடல் அரசு

நீரை மகேந்திரன்

117

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

### சமூகநீதிப் பார்வை

நீண்ட காலமாக, ஆக்கப்பூர்வமாக செயல்படுத்தப்படாமல் இருந்த ஒரு திட்டம், தொலைநோக்குப் பார்வை, சமூகநீதிச் சிந்தனை கொண்ட அரசால் மாற்றியமைக்கப்பட்டதன் மூலம், அந்தச் சாதனை நிகழ்ந்தது. 2021-2022-ஆம் ஆண்டிலிருந்து அந்தத் திட்டத்தில் விண்ணப்பிக்க விரும்பும் மாணவர்களுக்கு **'நான் முதல்வன்'** திட்டத்தின் கீழ் பயிற்சிகள் ஒருங்கிணைக்கப்பட்டன. குறிப்பாக, பல நாடுகளில் கட்டாயமாக்கப்பட்டுள்ள IELTS, GRE, TOEFL, GMAT போன்ற தகுதித் தேர்வுகளுக்கு மாணவர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்க வகை செய்யப்பட்டது.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் 500 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். குறிப்பிட்ட தகுதித் தேர்வில் தேர்ச்சிபெற்ற 10 மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் கல்வி நிறுவனத்தில் சேருவதற்கு, உதவித் தொகை வழங்கப்படும். குறிப்பாக, மாணவர்கள் கற்க விரும்பும் கல்வி நிறுவனம், அந்த நாட்டின் செலவினங்கள் மற்றும் வரிகளைப் பொறுத்து உதவித்தொகையின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது. வெளிநாட்டில் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள், இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க ஊக்குவிக்கப் படுகிறார்கள்.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்த உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கலாம். அந்த மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.8 இலட்சத்துக்குள் இருக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, 2025-26-ஆம் நிதியாண்டுக்கு 65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது, **திராவிட மாடல் நாயகர்** தலைமையிலான தமிழ்நாடு அரசு.

இந்த நிலையில், கடந்த வாரத்தில் ஏப்ரல் 14 அன்று, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் 'சமத்துவ நாள் விழா' நடைபெற்றது. அந்த விழாவில், அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை திட்டத்தில், பிரிட்டன், அமெரிக்கா, கனடா என பல நாடுகளில் உள்ள சிறந்த கல்வி நிறுவனங்களில் முதுகலைப்பட்டம் மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை மேற்கொள்ள தேர்வான 60 மாணவர்களுக்கு அதற்கான ஆணைகளை வழங்கினார் முதலமைச்சர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் 36 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அந்த 60 மாணவ, மாணவியருடன், ஏற்கெனவே வெளிநாடுகளில் முதுகலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் 174 மாணவர்கள் வருகை தந்தும் சிறப்பு சேர்த்தனர்.





# அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை திட்டம்!

## அறிவாயுதம் வலுப்பெறும்; தமிழ்நாடு வளம்பெறும்!

புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரை உயர்த்திப் பிடித்துக் கொண்டாடும் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் நடைபோடும் தி.மு. கழகத்தின் விடியல் அரசு, அண்ணல் அம்பேத்கர் பெயரில் சத்தமில்லாமல் ஒரு கல்விச் சாதனையை நிகழ்த்தி வருகிறது. ஆம்; அந்தத் திட்டத்தின் பெயர் 'அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை திட்டம்'. அந்தச் சாதனை வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள் உயர்கல்வி கற்பதற்கு அரசே செலவு செய்து வருகிறது என்பதுதான்.

கடந்த சில நாட்களுக்கு முன், தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் பொதுச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் சிந்தனைச் செல்வன், கடந்த அ.தி.மு.க ஆட்சியில் வெளிநாடுகளுக்குச் சென்று படிக்க விரும்பும் தாழ்த்தப்பட்ட மற்றும் பட்டியலின மாணவர்களுக்கு ரூ.4 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், அந்தத் தொகையும் செலவு செய்யப்படாமல் வேறு திட்டங்களுக்கு மாற்றி விடப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்தார்.

அத்துடன், அந்தத் திட்டத்தினை தற்போதைய அரசு, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகை திட்டம் என மாற்றியமைத்து, கடந்த நிதியாண்டில் 30 கோடி ரூபாய் ஒதுக்கியதுடன், அதன்மூலம் கடந்த ஆண்டு மட்டும் 174 தாழ்த்தப்பட்ட மற்றும் பட்டியலின மாணவர்கள் அயல்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயின்று வருகின்றனர் என்கிற தகவலையும் புள்ளிவிவரங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

### எதிர்காலத்தை மாற்றும் வாய்ப்பு!



இத்தாலியில் உள்ள university of padua-வில், உயர்கல்வி கற்பதற்கான உதவித் தொகை கிடைத்துள்ளது. இதில் விண்ணப்பிக்க, கல்லூரியில் 60 சதவிகிதத்துக்கு மேல் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

-வித்யா, திருநின்றவூர்.

### கனவு நிறைவேறியது!



லண்டனில் குளோபல் எம்.பி.ஏ. படிக்கச் செல்கிறேன். விண்ணப்பித்த 10 நாட்களில் உதவித்தொகை கிடைத்தது. 2017-ஆம் ஆண்டில் இருந்தே அந்தப் படிப்புக்கு முயற்சித்தேன். அப்போது வசதி யில்லை; இந்த உதவித் தொகையின் மூலம் என் கனவு நிறைவேறியுள்ளது.

-எம்.கோபிநாத், பெரம்பலூர் மாவட்டம்.

### 'உடைத்து நொறுக்கினோம்'

அந்த நிகழ்ச்சியில் பேசிய நம் முதலமைச்சர், "சாதியின் பெயரால் தொடக்கூடாது, கண்ணில் படக்கூடாது, தெருவில் நடக்கக் கூடாது, கோவிலுக்குள் நுழையக் கூடாது என்பதை எல்லாம், நம்முடைய கொள்கைகளால் போராட்டங்களால் இடைவிடாத பரப்புரைகளால் உடைத்து நொறுக்கி விட்டோம். கல்வி, வேலை, பதவி மூலம் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் கையில் அதிகாரம் செலுத்தும் வாய்ப்பு கொடுக்கப்பட்டு உள்ளது. இதுதான் திராவிட இயக்கம் ஏற்படுத்தி இருக்கக்கூடிய மாற்றம்.

சாதிதான் பிளவுபடுத்தும் முதலாவது சக்தி. அந்த ஆயிரம் ஆண்டு அழுக்கை ஒழிக்கத்தான், நாம் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் அனைவரும் தமிழர்கள் என்று உணர வைப்பதற்குத்தான் இன்று பாடுபடுகிறோம். நமது பாதையும், பயணமும் மிக நீண்டது. என்னைப் பொறுத்தவரைக்கும் சாதிய ஏற்றத்தாழ்வுகள் இல்லாத சமத்துவச் சமுதாயம் அமைய வேண்டும். சமூகநீதி, பொதுவுடைமைச் சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்க புரட்சியாளர் பிறந்த நாளில் மதவெறியை மாய்த்து, மனிதநேயம் காப்போம் 'ஜெய்பீம்'," என அவர் ஆற்றிய உரை ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை முழக்கமாக இருந்தது.

'கல்வியே விடுதலைக்கான ஆயுதம்' என அண்ணல் அம்பேத்கர் உணர்வூட்டினார். அந்தக் கல்வியை உலகளாவிய கல்வி நிறுவனங்களில் கற்றுவாருங்கள் என வழி அனுப்பி வைக்கிறது திராவிட மாடல் அரசு. அறிவாயுதம் வலுப்பெறும்; தமிழ்நாடு வளம்பெறும்!

...சாதனை தொடரும்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.